செய்தி வெளியீடு எண்: 392 நாள் : 11.08.2015

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நான்காண்டு பொற்கால ஆட்சியில் செய்தி மக்கள் தொடர்புத் துறை அளப்பரிய வளர்ச்சியைக் கண்டுள்ளது

----

## உதவி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திரபாலாஜி அவர்கள் பேச்சு

*****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நான்காண்டு பொற்கால ஆட்சியில் செய்தி மக்கள் தொடர்புத் துறை அளப்பரிய வளர்ச்சியைக் கண்டுள்ளது என உதவி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திரபாலாஜி அவர்கள் பேசினார்கள்.

செய்தி–மக்கள் தொடர்புத் துறையில் பணியாற்றும் உதவி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டம் சென்னை தரமணியில் உள்ள எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனக் கூட்ட அரங்கில் 11.08.2015 மற்றும் 12.08.2015 ஆகிய இரு நாட்கள் நடைபெறுகிறது.

இந்த ஆய்வுக் கூட்டத்தை, இன்று (11.08.2015) மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.கே.டி. ராஜேந்திரபாலாஜி அவர்கள் தொடங்கி வைத்துப் பேசும்போது கூறியதாவது:

“மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மக்களின் நலன் கருதி பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை அறிவித்து, செயல்படுத்தி, சாதனைகளைப் படைத்து வருகிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான நான்காண்டு ஆட்சியில் அனைத்துத் துறைகளும் சிறப்பான முறையில் சாதனைகள் படைத்துள்ளன.

செய்தி மக்கள் தொடர்புத் துறையைப் பொறுத்தமட்டில், இதுவரை எப்போதும் இல்லாத அளவிற்கு வரலாறு காணாத வளர்ச்சியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்படுத்தித் தந்துள்ளார்கள்.

தலைமைச் செயலகத்திற்கு வருகை தருகின்ற பல்வேறு ஊடகங்களைச் சார்ந்த செய்தியாளர்கள் தங்களுக்கு வழங்கப்படும் செய்திகள் மற்றும் புகைப்படங்களை உடனுக்குடன் தங்களது நிறுவனத்திற்கு அனுப்புவதற்கு ஏதுவாக "ஊடக மையம்", காலச்சுவடுகளின் தொகுப்பாக விளக்கும் பழைய நாளிதழ்களை நவீன மின்னணு முறையில் எண்மியப்படுத்தி பராமரிக்க தேவையான கணினி மற்றும் தொடர்புடைய மின்னணு இயந்திரங்கள், புகைப்படப் பிரிவிற்கு நவீன தொழில் நுட்பத்துடன்கூடிய புகைப்படக்கருவி, மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு புதிய வாகனங்கள், தொழில்நுட்பக் கருவிகள், புதிய பணியிடங்கள் போன்ற எண்ணற்ற வளர்ச்சிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் செய்தி மக்கள் தொடர்புத் துறைக் கண்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்கனவே அறிவித்த திட்டங்களை நிறைவேற்றியதோடு மட்டுமல்லாமல், தேர்தல் வாக்குறுதிகளில் சொல்லாத திட்டங்களையும் நிறைவேற்றித் தந்துள்ளார்கள். குறிப்பாக ஏழை, எளிய மக்கள் குறைந்த செலவில் வயிராற உண்ண அம்மா உணவகம், அம்மா குடிநீர், அம்மா மருந்தகம், அம்மா உப்பு, அம்மா சிமெண்ட், குறைந்த விலையில் தரமான துவரம் பருப்பு மற்றும் உளுந்தம் பருப்பு போன்ற பல்வேறு நலத்திட்டங்கள் உள்ளன. இத்திட்டங்களையெல்லாம் மக்களுக்கு கொண்டு சேர்க்கின்ற விளம்பரப்பணிகளை திறன்பட மேற்கொள்ள வேண்டும்.

சமீபத்தில், அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கும் புகைப்படக் கண்காட்சிகள் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டன. இப்புகைப்படக் கண்காட்சிச் சிறப்புற அமைய ஏற்பாடுகள் செய்த செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மற்றும் உதவி மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் தங்கள் பணிகளை திறம்பட ஆற்றிவருகிறார்கள். அவர்கள் மேலும், தங்களதுப் பணிகளை திறன்பட ஆற்ற வேண்டும்.

அரசின் திட்டங்களை மக்களுக்குக் கொண்டுச் சேர்க்கின்ற வகையில் விளம்பரப் பணிகளை முனைப்போடும், ஆர்வத்தோடும் செய்தி மக்கள் தொடர்பு அலுவலரோடு ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டும்.

செய்தித்தாள்களில் வெளிவருகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தொடர்பான செய்திகள், எந்தெந்த நாளிதழ்களில் வெளிவந்துள்ளன என்பதை செய்தி மக்கள் தொடர்பு அலுவலருடன் இணைந்து தலைமையிடத்திற்கு இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்யும் பணியினை காலதாமதமின்றி காலையிலேயே செய்து முடிக்க வேண்டும்.

மாவட்டங்களில் நடைபெறும் முக்கியத் திருவிழாக்கள், அரசு விழாக்கள், மாண்புமிகு அமைச்சர்கள் பங்கேற்கும் அரசு நிகழ்ச்சிகள் போன்ற முக்கிய நிகழ்ச்சிகளில் புகைப்படக் கண்காட்சியினை இன்னும் அதிக அளவில் நடத்திட வேண்டும். அரசின் நான்காண்டு சாதனைகளை கிராமங்கள்தோறும் விளம்பரப்படுத்திட வேண்டும். வீடியோப்படக்காட்சிகள் எவ்விதத் தொய்வுமின்றி கிராமங்களிலும், நகரங்களிலும் தொடர்ந்து நடந்திட உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் ஏற்பாடு செய்து, காண்பித்திட வேண்டும்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள், செய்தியாளர்களுடன் நல்லுறவைப் பேணி பாதுகாத்துவர வேண்டும். செய்திகள் உடனுக்குடன் வர காலதாமதமின்றி செய்தி வெளியீடுகளை தயார் செய்து, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் ஒப்புதலோடு வெளியிட வேண்டும். அரசின் சாதனைகள் தொடர்பான வெற்றிக் கதைகளை எழுதி, நாளிதழ்களில் வெளிவர செய்திட வேண்டும். கடந்த நான்கு ஆண்டு காலத்தில் அனைத்துத் துறைகளிலும் பல்வேறு சாதனைகள் படைக்கப்பட்டுள்ளன. எனவே, ஒவ்வொரு மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மற்றும் உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் அந்தந்த மாவட்டத்திலுள்ள அரசுத் துறைகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட சாதனைகள்

குறித்த தகவல்களைச் சேகரித்து, வெற்றிக் கதைகள் தயார் செய்து, நல்ல முறையில் நாளிதழ்களில் வெளிவரச் செய்திட வேண்டும்.

மாவட்டங்களில் உள்ள திரையரங்குகளில் தமிழ்நாடு அரசின் செய்தி படங்கள் திரையிடப்படுவதை உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் திரையரங்குகளுக்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011–ல் ஆட்சிப் பொறுப்பேற்றபின் செய்தி மக்கள் தொடர்புத் துறையில் பல்வேறு புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு, பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் சரியான அடிப்படை தேவைகள்கூட இல்லாத நிலையெல்லாம் இத்துறையில் மாற்றப்பட்டு, தற்போது வரலாறு காணாத மகத்தான வளர்ச்சி செய்தி மக்கள் தொடர்புத் துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், பல்வேறு அரசுத் துறைகளில் அயற்பணியில், பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு, செய்தி மக்கள் தொடர்புத் துறையைச் சார்ந்த அலுவலர்கள் உயர் பதவியில் பணிபுரிந்து வருகிறார்கள். பத்திரிகையாளர்கள் பெற்றுவந்த ஓய்வூதியம் தற்போது ரூ.6,000/– லிருந்து ரூ.7,500/–ஆகவும், பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் ரூ. 3,000/– லிருந்து ரூ.4,500/–ஆகவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உயர்த்தி வழங்கி வருகிறார்கள்.

செய்தி மக்கள் தொடர்புத் துறையில் பல்வேறு பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டதன் காரணமாக ஒருகாலத்தில் பதவி உயர்வில் ஏற்பட்ட தேக்கநிலை நீங்கி, தற்போது உடனுக்குடன் பதவி உயர்வுகள் வழங்கப்படுவதால், நீங்கள் இப்பொழுது உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி)ஆக பணியாற்றுகின்ற நல்வாய்ப்பை பெற்றுள்ளீர்கள். உங்கள் பணி மேலும் சிறப்புடன் அமைய வாழ்த்துகிறேன். இதனை மனதிற்கொண்டு அரசிற்கு விசுவாசமாகவும் மிகுந்த ஆர்வத்துடனும் உங்களது பணிகளைச் செவ்வனே மேற்கொள்ள வேண்டும்" என மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.கே.டி. ராஜேந்திரபாலாஜி அவர்கள் பேசினார்கள்.

இப்பணி ஆய்வுக் கூட்டத்தில், உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மேற்கொண்ட களவிளம்பரப் பணிகள் குறித்து மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத்

திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் விரிவான ஆய்வை மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் மூ. இராசாராம், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை வகித்து பேசினார்கள். செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசினார்கள், கூடுதல் இயக்குநர் (செய்தி) திரு. எஸ்.பி. எழிலழகன் அவர்கள் நன்றி கூறினார்கள். கூட்டத்தில் இணை இயக்குநர்கள் திரு. கு. தாணப்பா, , திரு. உல. ரவீந்திரன், திரு. சிவ. சு. சரவணன், துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள், அனைத்து மாவட்ட உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மற்றும் பிரிவு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**